16.08.2022

**எம்.சி.ஓ.பி.நெ.137/20**

**ம.சா.1 பெயர்:முருகேசன்**

**<u>சாட்சி ஆஜர். பிரமாண செய்யப்பட்டார் இரண்டாம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

விபத்து சமயத்தில் நான் டிவிஎஸ் எக்ஸெல் ஓட்டிச் சென்றேன். அந்த வாகனம் எனக்கு சொந்தமானது. எனக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது அதை நான் நீதிமன்றத்தில் முன்னிலைபடுத்தவில்லை. விபத்து சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. எனக்கு முன்னால் சென்ற வாகனம் டிவிஎஸ் எக்ஸெல் எச்டி வாகனம். எனக்கு முன்னால் சென்ற வாகனம் இடதுபுறத்திலிருந்து வலப்பறம் திடிரென திரும்பியதால் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு திரும்வியபோது எதிர்திசையில் இருந்து வந்த வாகனம் எனக்கு முன்னால் சென்ற வாகனத்தில் மோதியது என்றால் சரிதான். எனக்கு முன்னால் சென்ற வாகனமும் எதிர் திசையில் வந்த வாகனமும் மோதியதாலும் அவர்களது கவணக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது. நான் இருசக்கர வாகனத்தை வேகமாக ஓட்டிச்சென்றதால் அதை கட்டுப்படுத்த முடியாமல் முன்னால் சென்ற வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு முன்னால் சென்ற வாகனத்தின் உரிமையாளர் மற்றும காப்பீட்டு நிறுவனத்தை நான் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனக்கு முன்னால் சென்ற வாகனமும் அதன் உரிமையாளர் மற்றும காப்பீட்டு நிறுவனம் எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கு நஷ்டஈடு வழங்க பொறுப்பாவார்கள் என்றால் சரியல்ல. அவர்களை நான் தரப்பினர்களாக சேர்க்காததால் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல. எனக்கு தலையில் காயம் ஏற்பட்டுள்ளது. தலைகவசம் அணிந்திருந்தால் எனக்கு காயங்கள் ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லையென்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எனங்கது ஏற்பட்ட காயங்களுக்கு 1ம் எதிர்மனுதாரர் தான் நஷ்டஈடு வழங்கவேண்டுமென்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீட்டிற்கு ஆவணங்கள் முன்னிலைபடுத்தியுள்ளேன் என்றும் கோரியுள்ள இழப்பீடு அதிகமென்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை

**ஒம்/-**

**திரு.எம்.அஷ்பாக் அஹமத், பி.ஏ.,பி.எல்.,**
**சார்பு நீதிபதி,**
**ஊத்தங்கரை.**